# கைத்தறி மற்றும் துணிநூல் துறை

## மானியக் கோரிக்கை எண்.17

# அறிவிப்புகள்

## 2012 – 2013

மரு. ச.சுந்தரராஜ்
கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்



## 1. கைத்தறி நெசவாளர்களுக்கு 10 விழுக்காடு அடிப்படைக் கூலி உயர்வு

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு அடிப்படைக் கூலியுடன் அகவிலைப்படியும் சேர்த்து நெசவுக்கூலி வழங்கப்பட்டு வருகிறது. நெசவாளர்களை ஊக்குவிக்கவும், அவர்களது வருவாயை அதிகரித்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பாண்டில் தொழிலாளர் தினமான மே தினம் (01.05.2012) முதல் 10 விழுக்காடு அடிப்படைக் கூலி உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் 1173 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறுவர். இதன் மூலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கூடுதலாக சுமார் ரூ.25.00 கோடி செலவினம் ஏற்படும்.

## 2. டாக்டர் எம்.ஜி.ஆர் கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையின் கீழ் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையை உயர்த்தி வழங்குதல்.

நெசவாளர்களின் குழந்தைகளை மேற்படிப்பு பயில ஊக்குவிப்பதற்காக டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையின் கீழ் நெசவாளர்களின் குழந்தைகளுக்கு 32 பிரிவு படிப்புகளில் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கு ஆண்டிற்கு ரூ.2000/– முதல் ரூ.3500/– வரை கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 2012–13 ஆம் கல்வி ஆண்டு முதல் மேற்படி கல்வி உதவித் தொகையை வருடம் ஒன்றிற்கு ரூ.4000/– முதல் ரூ.7500/– வரை உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் ஆண்டொன்றிற்கு ரூ.3.67 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும்



## 3. பரமக்குடியில் வடிவமைப்பு மற்றும் பயிற்சி மையம் அமைத்தல்

மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நவீன வடிவமைப்புகளைப் பற்றி நெசவாளர்கள் அறிந்து கொள்ளவும், உயர் தொழில்நுட்பம் மற்றும் தரத்துடன் புதிய வடிவமைப்புகளை உருவாக்குவதற்கும், இளைய தலைமுறையினர் நெசவுத் தொழிலை மேற்கொள்ளவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி பரமக்குடியில் ரூ.54.28 இலட்சம் மதிப்பீட்டில் வடிவமைப்பு மற்றும் பயிற்சி மையம் அமைக்கப்படும்.

## 4. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு காலாண்டுக்கு ஒருமுறை வழங்கப்படும் வட்டிமானியத் தொகையினை மாதந்தோறும் வழங்குதல்.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக தேசீய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் (நபார்டு) மறுநிதியுதவி திட்டத்தின்கீழ் நடைமுறை மூலதனம் பெற்று வருகின்றன. இதற்கு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியினர் விதிக்கும் வட்டியினை சங்கங்கள் முதலில் செலுத்திய பின்னர் 4 விழுக்காடு தொகை ஒவ்வொரு காலாண்டுக்கும் அரசால் வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இவ்வாறு காலண்டுக்கு ஒருமுறை வழங்கப்படும் வட்டிமானியத் தொகை, மாதந்தோறும் வழங்கப்படும்.



## 5. கைத்தறி செறிவுப் பகுதிகளான கும்பகோணம் மற்றும் காஞ்சிபுரத்தில் ரூ.92.19 இலட்சம் மதிப்பீட்டில் நெசவாளர் பயிற்சி மையங்கள் அமைத்தல்.

கைத்தறி நெசவாளர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்பு மற்றும் அதிக ஊதியம் பெற்றிட ஏதுவாக, நெசவுத் தொழிலில் உயர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி மேம்பட்ட தரத்துடன் புதிய வடிவமைப்புகளில் கைத்தறி துணிகளை உற்பத்தி செய்யும் பொருட்டும், நெசவுத் தொழிலை ஒரு சமுதாயம் சார்ந்த தொழிலாக அன்றி, உரிய பயிற்சி பெற்ற அனைவரும் நெசவுத் தொழிலை மேற்கொள்ள முடியும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாட்டில் கைத்தறி செறிவுப் பகுதிகளான கும்பகோணம் மற்றும் காஞ்சிபுரத்தில் ரூ.92.19 இலட்சம் மதிப்பீட்டில் நெசவாளர் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும்.

## 7. தள்ளுபடி மானியத் திட்டத்தினை சீரமைத்தல்

தமிழகத்திலுள்ள தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற கைத்தறித் துணிகளின் விற்பனையினை மேம்படுத்தும்பொருட்டு மத்திய, மாநில அரசினால் தள்ளுபடி மானிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்தின் பயன்கள் நெசவாளர்களுக்கும் சென்றடையும் வகையிலும், திட்டத்தினை மேலும் செம்மையுற செயல்படுத்தும் வகையிலும் தள்ளுபடி மானிய திட்டம், மறுசீரமைப்பு செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இயக்குநர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்படும்.



## 8. பாரம்பரியமிக்க கைத்தறி இரகங்களை பாதுகாக்கவும், புதிய வடிவமைப்பு மற்றும் வண்ணங்களில் கைத்தறி இரகங்களை உற்பத்தி மேற்கொள்ள ஏதுவாக ஜவுளி நூலகம் (Textile Library) அமைத்தல்.

கைத்தறி நெசவில் ஆண்டாண்டு காலமாக உள்ள பாரம்பரியத்தையும், கலைநயத்தினையும் பாதுகாக்கவும், கைத்தறி இரகங்களின் வடிவமைப்பு மற்றும் வண்ணங்களில் புதிய யுத்தியினை பயன்படுத்தி உற்பத்தி மேற்கொள்ளவும் ஏதுவாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி சென்னை கோ–ஆப்டெக்ஸ் வளாகத்தில் ஜவுளி நூலகம் (Textile Library) ரூ.25.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும். இந்நூலகத்தில் துணித் தொழில் சம்மந்தப்பட்ட புத்தகங்கள், வாராந்திர மற்றும் மாதாந்திர இதழ்கள், கைத்தறி இரகங்களின் மாதிரி துணிகள், மாதிரி கைத்தறிகள் பார்வைக்கு வைக்கப்பட்டு பராமரிக்கப்படும்.

## 8. நட்சத்திர இரக உற்பத்தியினை அறிமுகப்படுத்துதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கைத்தறி துணிவாங்கும் வாடிக்கையாளர்களின் தேவையினை முழுமையாக பூர்த்தி செய்யும் பொருட்டு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் நடப்பாண்டில் **61** நட்சத்திர ரகங்களை கண்டறிந்து தேவைக்கு ஏற்ப உற்பத்தியை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. இதனால், நெசவாளர்கள் குறிப்பாக இளம் நெசவாளர்கள் அதிக கூலி பெறுவதுடன், வாடிக்கையாளர்களின் தேவையும் முழுமையாக பூர்த்தி செய்யப்படும்.



## 9. தமிழகத்திலுள்ள ஜவுளிப் பூங்காக்களுக்கு பிரத்யேகமான மின்பாதை (Separate Electricity Feeder)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தொழிற்துறையில் ஏற்பட்டு வரும் முன்னேற்றங்களை கருத்தில் கொண்டு தமிழகத்தில் செயல்பட்டு வரும் ஜவுளிப் பூங்காக்களில் ஏற்றுமதி இரகங்களை பெருமளவில் உற்பத்தி செய்து, அதன் மூலம் அன்னிய செலாவணி ஈட்டுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் பிரத்யேகமான மின்பாதை (Separate Electricity Feeder) அமைக்கப்பட்டு தடையில்லா மின்சாரம் வழங்கப்படும்.

## 10. செயலிழந்த நிலையிலுள்ள 13 கூட்டுறவு நூற்பாலைகளின் நிலைப்பாட்டினை ஆராய்ந்து ஆலோசனை வழங்க உயர்மட்டக் குழு அமைத்தல்

தமிழ்நாட்டில் செயலிழந்த நிலையிலுள்ள 13 கூட்டுறவு நூற்பாலைகளை மீண்டும் திறத்தல் அல்லது கலைத்தல் அல்லது சொத்துக்களை பிற துறைகளுக்கு மாற்றம் செய்தல் அல்லது விற்பனை செய்தல் குறித்து ஆலை வாரியாக ஆய்வு செய்து மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தலைமைச் செயலாளர் தலைமையில் ஓர் உயர்மட்டக்குழு அமைக்கப்படும்.



## 11. ஈரோட்டில் அமைந்துள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையை ரூ.5.82 கோடி செலவில் நவீனப்படுத்தப்படும்.

ஈரோட்டில் மூடப்பட்டிருந்த தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை 10.06.2011 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் மீண்டும் திறக்கப்பட்டு தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இந்த ஆலையின் தற்போதைய பதனிடும் திறன் நாளொன்றிற்கு 50,000 மீட்டர் துணிகள் என்ற அளவினை 70,000 மீட்டர் துணிகளாக உயர்த்த ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்ட நிதியின் மூலம் ரூ.5.82 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்படும்.

**12. மூடப்பட்டுள்ள இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையினை ரூ.5.75 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்பட்டு மீண்டும் செயல்படுத்தப்படும்.**

இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்காக பிரத்யேகமாக 12,320 கதிர்களுடன் 1985 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. பல்வேறு காரணங்களால் மூடப்பட்ட இந்நூற்பாலை, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிட தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடனும், அப்பகுதியிலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தொடர்ந்து நூல் கிடைப்பதை உறுதி செய்யவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.5.75 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்பட்டு திறக்கப்படும். இதன் மூலம் அப்பகுதியிலுள்ள 300 ஆதிதிராவிடர்கள் வேலை வாய்ப்பு பெறுவர்.

**மரு. ச.சுந்தரராஜ்**
**கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்**